**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வீட்டுவசதி - கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் நிலுவையிலுள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.04.2004-ஆம் தேதிக்குள் முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை தள்ளுபடி செய்தும் இதன் தொடர்பாக முதன்மை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை தள்ளுபடி செய்தல் - கால அவகாசத்தை 31.10.2004 வரை நீட்டித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(கூட்.1)துறை**

அரசாணை(நிலை)எண் 340 நாள் 7.9.2004.

படிக்கப்பட்டது:

1) அரசாணை(நிலை)எண். 49 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,, நாள். 20.2.2004.
2) கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர் கடித எண் 10465/2003/ஆ4, நாள். 28.4..2004.

= = =

ஆணை:

மேலே பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், கீழ்க்கண்டவாறு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன:-

1) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் 1.10.2003-ல் நிலுவையில் உள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.04.2004-ஆம் தேதிக்குள் சங்கத்திற்கு முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவை கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

2) பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 1.10.2003 அன்றுள்ளவாறு நிலுவையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 30.04.2004 தேதிக்குள் முழுமையாக செலுத்தும் பட்சத்தில் அச்சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

3) மேலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் இதுபோன்ற கடந்த கால வருவாய் இழப்பிற்கு இனி அரசு நிதியுதவி வழங்காது.

2. அரசு அறிவித்துள்ள வட்டிச் சலுகை 30.4.2004-உடன் முடிவடைவதை கருத்திற்கொண்டும், தவணை தவறிய கடன்தாரர்கள் தங்களின் தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை

சங்கத்திற்கு திருப்பிச் செலுத்த மேலும் கால அவகாசம் கேட்டுள்ளதை கருத்திற்கொண்டும், தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் கடுமையை கருத்திற்கொண்டும், தவணை தவறிய அங்கத்தினர்கள் 30.4.2004க்குள் செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 31.10.2004 வரை செலுத்துவதற்கு ஏதுவாக அபராத வட்டி தள்ளுபடி சலுகை காலத்தை 31.10.2004 வரை கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி) அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பதிவாளரின் பரிந்துரையை கவனமாக பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையினை அரசு வெளியிடுகிறது.

1. பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியுள்ளவர்கள் 1.10.2003-ல் நிலுவையில் உள்ள தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 31.10.2004-ஆம் தேதிக்குள் சங்கத்திற்கு முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவை கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

2. பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் 1.10.2003 அன்றுள்ளவாறு நிலுவையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு செலுத்த வேண்டிய தவணை தவறிய அசல் மற்றும் வட்டியை 31.10.2004 தேதிக்குள் முழுமையாக செலுத்தும் பட்சத்தில் அச்சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

லால் ராணா சைலோ
அரசு செயலாளர்

பெறுநர்

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர்,சென்னை.20.
தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், சென்னை.7.
அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மூலமாக.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை.9.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை.18.
மாநில கணக்காய்வுத் தலைவர் (பெயரில்), சென்னை.18.
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை), சென்னை.35.
மாநில கணக்காய்வுத் தலைவர் (சி.ஏ.எஸ்), சென்னை.9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை.9.
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி)அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை.9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி), சென்னை.9.
அரசு செயலரின் நேர்முக உதவியாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை.9.
ஆளுநரின் தனிச் செயலர், சென்னை-25
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்